9th September 1958]

• 122 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that the Government have purchased one thousand gramophone records on the removal of untouchability;

(b) if so, the cost involved; and

(c) how they will be made use of in the villages?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes. The Government sponsored the production of two records, as a part of the Anti-Untouchability Publicity Campaign. Five hundred records in each of these have been purchased.

(b) The expenditure incurred is about Rs. 4,000.

(c) The rcords will be distributed to District Publicity Officers, Block Development Officers, District Welfare Officers, and other field units which have gramophones. for being played in the villages during their tours and at public and Government functions.

SRI A. A. RASHEED : Are these records in the form of lectures or songs?

THE HON. SRI P. KAKKAN : பாட்டுகளாகத்தான் இருக்கின்றன.

SRI K. B. S. MANI : தற்போது மாகாண அரசாங்கத்தாலும், மத்திய அரசாங்கத்தாலும் செய்யப்படுகிற தீண்டாமை ஒழிப்பு பிரசாரங்கள் இத்தனையும் சேரிகளில்தான் நடைபெறுகின்றன. ஆனால் தீண்டாமைக்கு ஆதாரமாக இருக்கிறவை, ஜாதி இந்துக்களுடைய கொள்கைகளும், அவர்களுடைய பரம்பரைப் பழக்கங்களுமாகும். ஆகவே ஜாதி ஹிந்துக்கள் அவர்களுடைய பரம்பரைப் பழக்கங்களை மாற்றிக் கொண்டால் ஒழிய, அவர்கள் முன்னேற்றம் அடைந்தாலொழிய தீண்டாமை ஒழிய முடியாது என்று அரசியலாருக்கு தெரிந்திருந்தும்கூட ஜாதி ஹிந்துக்களின் தெருக்களிலும், உயர் ஜாதி ஹிந்துக்களின் தெருக்களிலும் இந்த பிரசாரங்களை நடத்த அரசாங்கம் நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : ஹரிஜன மக்கள் வாழும் இடங்களில் மட்டுமல்ல. எல்லாயிடங்களிலும் பிரசாரம் செய்யப்படுகிறது.

SRI T. VELUCHAMI : கட்டாயக் கல்விமுறைதான் இந்த தீண்டாமையை நிரந்தரமாக ஒழிப்பதற்கு ஒரு அருமருந்து என்று சர்க்கார் கருதுகிறதா ? அந்த நோக்கத்தோடு கட்டாயக் கல்வி முறையை எவ்வளவு சீக்கிரம் கொண்டு வரமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் அமுலுக்குக் கொண்டு வர சர்க்கார் முயற்சிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : சர்க்காரது கொள்கையும் அதுதான். எவ்வளவு சீக்கிரம் கொண்டுவர முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கொண்டு வரப்படும்.

Family Planning

• 123 Q.—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state the steps taken by the Government to see that family planning literature and advice at the Family Planning Centre do not reach the unmarried and juveniles?

[9th September 1958

THE HON. SRI M. A. MANICKAVELU : The staff at the Family Planning Centres have been instructed to give instructions relating to family planning and supply literature on it only to married persons.

SRI S. LAZAR : இப்பொழுது சர்க்கார் பிரசுரங்களை விற்கக் கூடிய அத்தனை கடைகளிலும் இப்புத்தகங்கள் கிடைக்கின்றன அல்லவா ? இவைகளை சிறுவர்களுக்கும், கல்யாணம் ஆகாதவர்களுக்கும் விற்பதை தடுக்கும் முறையில் அல்லது அவர்களுக்கு இவைகள் கிடைக்காத முறையில் செய்வதற்கு வேண்டிய நிலைமையை ஏற்படுத்த சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இவைகள் மற்றயிடங்களிலும் கிடைக்கலாம். ஆனால் அதற்கு வேண்டிய மிக அவசியமான சில விஷயங்களைச் சொல்லிக் கொடுப்பது "க்ளினிக்"கில்தான். அவைகள் பிரசுரங்களில் இல்லை.

SRI D. S. ATHIMOOLAM : இந்த குடும்பக் கட்டுப்பாடு விஷயமாக ஜில்லா தலைநகர ஆஸ்பத்திரிகளில் உள்ள வசதிகளைப் போல் தாலுகா தலைநகர ஆஸ்பத்திரிகளிலும் அம்மாதிரி சிகிச்சை செய்ய வேண்டிய வசதியளிக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கொஞ்சம் கொஞ்சமாக இதை விஸ்தரித்துக் கொண்டே போகிறோம். இப்பொழுது ஜில்லா தலைமை ஆஸ்பத்திரிகளில் இருக்கின்றன. தாலுகா தலைமை ஆஸ்பத்திரிகளுக்கு பிறகு வரலாம்.

SRI P. S. K. LAKSHMIPATHI RAJ : குடும்பக் கட்டுப்பாட்டை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று முயற்சிக்கிற இந்த சர்க்கார் சினிமாக்களில் காதல் கட்டங்களை அதிகமாக காட்டும் படங்களை அனுமதிப்பது என் என்று அமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு விளக்கம் தருவார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : காதல் வெறும் காதல் அளவிலேயே நின்று விட்டால் குடும்பக் கட்டுப்பாடே வேண்டியதில்லை.

SRI A. GOVINDASAMY : குடும்பக்கட்டுப்பாடு விஷயத்தில் இங்கு வீற்றிருக்கிற எட்டு அமைச்சர்களுக்கும் ஒருமித்த கருத்துண்டா ? அல்லது வேறுபாடான கருத்துக்கள் உள்ளவர்கள் இருக்கிறார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: அவர்களின் மனது எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்தவரையில் வித்தியாசம் ஒன்றுமில்லை.

Higher Technological Institute

* **124 *Q*.—SRI P. G. MANICKAM** : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

கிண்டியில் ஆரம்பிக்கப்படப்போகும் உயர்தர கைத்தொழில் கலை நிலையம் **(Higher Technological Institute)** வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கிண்டியில் ஆரம்பிக்கப்படப் போகும் உயர்தர கைத்தொழில் கலை நிலையம் மத்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட இருக்கின்றது. 1959-ம் ஆண்டிலிருந்து இந்நிலையம் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Most Backward Classes

* **125 *Q*.—SRI S. LAZAR** : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the principles followed by the Government in preparing the list of Most Backward Classes;